# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101949

1. District மாவட்டம் : திண்டுக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 02/2023 Date: நாள் 20.06.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: as amended by Prevention of Sections பிரிவுகள்: -
   (iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: -
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 16.06.2023 at 12.15 hrs.
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2023 Time நேரம் : 21.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20.06.2023 Time நேரம் : 07.15 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அய்யம்பாளையம் காத்தா கோவில் அருகே, ஒரு தோப்பில் நில அளவை செய்து கொண்டிருந்த போது.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சுமார் 35 km. தென்மேற்கு
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. ஞானசேகர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. முருகேசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1976 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் த.அ.போ.கழகம் நடத்துநர் (g) Address : முகவரி 539/2, வேல் நகர், கொவரப்பன்பட்டி, அய்யம்பாளையம், ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. M. ராஜு, சார் ஆய்வாளர், நில அளவைப்பிரிவு, ஆத்தூர் தாலுகா அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

/

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

H. Gnanasekar 20/06/23 | [signature] 20/06/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20.06.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.10 hrs.

Name: பெயர் ம.க. சோபா சித்ராணி,
Rank: நிலை …………………No. எண் ……….
காவல் ஆய்வாளர்,
ஊ.த.த.பிரிவு, திண்டுக்கல்

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:2/2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

**Column No.12, FIR Contents**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 19.06.2023-ம் தேதி இரவு 21.30 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, அய்யம்பாளையம்,தேவரப்பன்பட்டி, வேல்நகர், கதவு எண்.539/2ல் வசிக்கும் R.முருகேசன் அவர்களின் மகன் M.ஞானசேகர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திண்டுக்கல் அவர்கள் பெற்று ஒப்புதல் செய்து கொடுத்த புகாரை நான் 19.06.2023ம் தேதி இரவு 21.30 மணிக்கு பெற்று 20.06.2023-ம் தேதி காலை 07.15 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: M.ஞானசேகர், த/பெ .R.முருகேசன், 539/2, வேல்நகர், தேவரப்பன்பட்டி, அய்யம்பாளையம், ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் பெறுநர். DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல் மாவட்டம். நான் மேலே சொன்ன விலாசத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் வத்தலகுண்டு அரசுபோக்குவரத்து பணிமனையில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.09.2014 ம் தேதி ஆத்தூர் வட்டம் அய்யம்பாளையம் கிராமம் தேவரப்பன்பட்டி ஊராட்சியில் வேல்நகர் என பெயரிடப்பட்டு மனையிடங்களாக பிரிக்கப்பட்டதில் பிளாட் எண் 26 ல் சுமார் 1878 சதுர அடியை திரு.S.A.சந்திரபாபு என்பவரிடமிருந்து கிரையமாக பெற்றேன். அந்த காலி மனை இடத்தில் 2019 வருடம் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். இந்நிலையில் எனது வீட்டிற்கு எனது பெயரில் பட்டா பெறுவதற்காக கடந்த 04.02.2023 ம் தேதி பட்டிவீரன்பட்டி கூட்டுறவு சொசைட்டியில் உள்ள இ சேவை மையத்தில் விண்ணப்பித்தேன். அதன்பிறகு சுமார் 4 மாத காலமாக என் விண்ணப்பத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் நான் எனது விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் சில விபரங்களை கேட்டேன். அதன்பின்பு கடந்த 10.06.2023 ம் தேதி ஆத்தூர் தாலுகா அலுவலகத்தில் பணிபுரியும் நிலஅளவைப்பிரிவு சார் ஆய்வாளர் திரு.M.ராமு அவர்கள் அவருடைய அலைபேசி எண் 93610 31941 லிருந்து என்னுடைய அலைபேசி எண்

99426 46555 க்கு அழைத்து ஆன்லைனில் பதிவேற்றம் செய்த ஆவணங்களை உடனடியாக கொண்டு வந்து கொடுக்கமாறு கூறினார். நான் அவரிடம் கோயமுத்தூர் சென்றுவிட்டதால் திங்கள் கிழமை அல்லது செவ்வாய் கிழமை வந்து கொடுக்கிறேன் என்று கூறினேன். பின்பு 13.06.2023 ம் தேதி செவ்வாய்கிழமை காலை ஆத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு சென்று 10.46 மணிக்கு சார் ஆய்வாளருக்கு போன் செய்து அவரை நான் நேரில் சந்தித்து ஆவணங்களை கொடுக்க வந்திருப்பதாக கூறினேன். அவர் தாலுகா அலுவலகத்தில் இல்லை என்றும் அரை மணி நேரத்தில் அய்யம்பாளையம் வந்து விடுவதாகவும் கூறினார். பின்பு நானும் அய்யம்பாளையம் வந்து VAO அலுவலகத்தில் காத்திருந்தேன். அவர் VAO அலுவலகத்திற்கு வந்து என்னிடம் ஆவணங்களை பெற்று சரிபார்த்து நகல்களை மட்டும் எடுத்து கொண்டு அசல் ஆவணங்களை என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டார். என்னை வீட்டிற்கு செல்லுமாறும் சற்று நேரத்தில் வந்து வீட்டை அளந்து கொள்வதாகவும் கூறினார் . பின்பு நான் வீட்டிற்கு சென்ற பிறகு மதியம் சுமார் 02.30 மணிக்கு மூன்று உதவியாளர்களுடன் எனது வீட்டிற்கு வந்து சார் ஆய்வாளர் திரு.ராமு அளவீடு செய்தார். அதன்பின்பு நான் 16.06.2023ம் தேதி காலை சுமார் 12.15 மணிக்கு மேற்படி சார் ஆய்வாளர் திரு.M.ராமு அவர்களை சாத்தாகோவிலுக்கு அருகே உள்ள ஒரு தோப்பில் நிலஅளவை மேற்கொண்டிருந்த போது அவரை சந்தித்து எனது பட்டா சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் ரூ.3,000/- வரை செலவாகும் என்று சொன்னார். நான் பட்டா பெறுவதற்காக கட்ட வேண்டிய கட்டணங்களை ஏற்கனவே கட்டிவிட்டேன் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் உங்களுக்கு பட்டா வழங்க சிபாரிசு செய்து ஏற்பாடு செய்து தருவதற்கு எனக்கு கொடுக்க வேண்டிய பணம் என்று கூறினார். நான் அவரிடம் ஏதாவது கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.500/- குறைத்து கொண்டு ரூ.2,500/- கொடுங்கள் என்றும், பணம் கொடுத்தால் தான் வேலை நடக்கும் இல்லையென்றால் கிடப்பில் கிடக்கும் என்றும் கூறினார். மேலும் அவர் நிலஅளவை சம்பந்தமாக அடிக்கடி வெளியல் செல்வதால் வரும்போது போன் செய்து விட்டு வருமாறு கூறினார். நான் பணத்தை ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். பின்பு நான் வேலைக்கு சென்று விட்டதால் இன்று 19.06.2023 ம் தேதி மதியம் 03.24 மணிக்கு சார் ஆய்வாளர் திரு.M.ராமுவிடம் போன் செய்து நான் வேலைக்கு சென்றுவிட்டதால்

இன்று வரமுடியவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் நாளை காலை அய்யம்பாளையம் VAO அலுவலகத்தில் வந்துபாருங்கள் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லி விட்டு அலைபேசியை வைத்துவிட்டேன். பின்பு நான் வீட்டிற்கு சென்று யோசனை செய்ததில் என்னுடைய பெயரில் பட்டா பெறுவதற்காக நிலஅளவைப்பிரிவு சார் ஆய்வாளருக்கு லஞ்சம் கொடுத்து வாங்குவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.2,500/- லஞ்சமாக கேட்ட நிலஅளவைப்பிரிவு சார் ஆய்வாளர் திரு.M.ராமு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் நான் இ சேவை மையத்தில் கொடுத்த விண்ணப்பம், ஒப்புகை சீட்டு, வில்லங்க சான்று, பணம் ரூ.60/- மற்றும் ரூ.120/- கட்டியதற்கான ரசீதுகள் ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும் சார் ஆய்வாளர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,500/-ம் கொண்டு வந்துள்ளேன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- xxxxx (M.Gnanasekar, 19-06-2023)

Received the complaint on 19.06.2023 at 21.30hrs, Inspector Tmt.Rupa Geetharani for necessary action. S/d-xxxxx (J.Nagarajan, DSP, V&AC, Dindigul, 19.06.2023)

Sir, Received the complaint on 19.06.2023 at 21.30 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused is found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.02/2023, u/s. 7(a) of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 20.06.2023 at 07.15 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 20.06.2023)

Original FIR along with written complaint of Tr.M.Gnanasekar, S/o.R.Murugesan, 539/2, Vel Nagar, Devarappanpatti, Ayyampalayam, Athoor Taluk, Dindigul District and with the relevant documents are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

JRupa 20/06/23

(J.Rupa Geetharani)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.